# கணினியில் தமிழ் வளர்ச்சி

**மா.புகழேந்தி**

உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை, அன்னை கலை மற்றும் அறிவியல் கல்லூரி, கோவிலாச்சேரி, கும்பகோணம்

## முன்னுரை

இருபத்தைந்து ஆண்டுகளுக்கு முன் கணினியில் தமிழ் எழுத்துக்களைக் தட்டச்சு செய்ய முடியாத நிலையில் இருந்து ரோமன் எழுத்துக்களில்தான் தமிழை எழுத முடிந்தது. தமிழ் எழுத்துக்களில் மாற்றிக்கொள்ளக்கூடிய வளர்ச்சியும் தமிழ் எழுத்துக்களையே நேரடியாக தட்டச்சு செய்துகொள்ளக்கூடிய வளர்ச்சியை எட்டியது. இன்று இணையத்தில் உலகின் பலமொழிகள் இடம் பெற்று வருகின்றன. ஆயினும் ஆங்கில மொழியை அடுத்து மிகுதியாகப் பயன்படுத்தப்படும் மொழி தமிழ் என்பது பெருமைக்குரிய செய்தியாகும். தகவல் தொடர்பான ஒரு நீட்டியாகத்தான் கணினியும் இணையமும் நமக்கு நம் பணிகளை எளிதாக்கியது. இன்று எந்த ஒரு துறையும் இணைய செயல்பாடு இன்றி இயங்குவதில்லை.

தமிழ் முன்னோடியாக திகழ்வதற்கும் தமிழ்கணினிப் பயன்பாட்டிற்கு மொழியியலை ஆய்வதற்கும் முயற்சி செய்து கன்னித் தமிழை வளர்த்தெடுப்பதற்கு ஒரு பெரும் மைல்கல்லாக அமையும் என்பதில் ஐயமில்லை.

## கணினி பயன்பாட்டால் தமிழ் வளர்ச்சி

நமது ஆழ்மனத்தின் எண்ணங்கள் உள்ளத்தில் அமிழ்ந்து கிடக்கும் கனவுகள், ஆசைகள், கற்பனைகள் இவற்றை எல்லாம் பிறரிடம் பகிர்ந்து கொள்கையில் அவற்றின் சாரம் மாறாமல் மயக்கமோ தடையோ ஏதும் இல்லாது எடுத்துக்கூற ஒருக் கருவியாக இருப்பது அவரவரது தாய்மொழி. என்னத்தான் நாம் நமது பணி நிமித்தமாக அந்நிய மொழியைக் கற்று அதையே பயன்படுத்தி நம் கருத்துக்களைப் பகிர்ந்து கொண்டாலும் அந்நிய மொழியில் வார்த்தைகளை கோர்வையாக்கி அதை நம் மனதுள் நிச்சயமாக நம் தாய் மொழியில் சொல்லி ஒத்திகைப் பார்த்துக் கொள்வோம். இப்போது நமது எண்ணங்களை கருத்துக்களை எல்லாம் நமது தாய் மொழியிலேயே விளக்க விவரிக்க நல்லதோர் வாய்ப்பாக நம்மால் கணினியிலும் நமது தமிழ்மொழியை பயன்படுத்த முடியும்.

தமிழ் தட்டச்சு செய்ய ஆவணங்களை உருவாக்குவோர் யாவரும் இதனை நினைவில் கொள்ளுதவல் அவசியம்.

## தமிழ் மின் இதழ்கள்

தமிழ்மொழி வளர்ச்சியில் தமிழ் மின் இதழ்களின் பங்கு அளப்பெரியது. தமிழ் மொழியிலேயே இன்று பல இணைய தளங்கள் செயல்பட்டு வருகின்றன. அவற்றில் ஆறாம் திணை, இன்தாம் தமிழ் நெட்ஜால், வெப் உலகம், தமிழ் நெட் போன்ற தமிழ் மின் இதழ்கள் குறிப்பிடத்தக்கன. தமிழ் இணையத்தை ஆறாம் திணையாக கருதி செயல்பட்டு வரும் ஆறாம் திணை இணையத்தளம் சிறப்புப் பார்வை சமயம், கவிதை, சிறுகதை, குழந்தை இலக்கிய கல்வி, புதுவரவு நூல்கள், விடுகதை, பழமொழி, தமிழ் அறிவோம், சொல்லாட்டம், நேர்காணல், வெண்பா, மேடை, சென்னைச் சுவடுகள், குறுந்தொடர், சிற்றிதழ் பக்கம், தலையங்கம் என தமிழின் அனைத்து இலக்கிய வகைகளைச் சிறப்பாக வெளியிட்டு வருகின்றனது.

பல தமிழ் இணையத்தளங்களும் செய்திகள், ஆன்மீகம், வேலை வாய்ப்பு, தகவல் தொழில்நுட்பம், சுற்றுலா, வரலாறு, ஜோதிடம், மகளிர் பக்கம், கோயில்கள், பண்டிகைகள் போன்ற பிரிவுகளில் பல முக்கியமான தகவல்களைத் தருகின்றன.

**தமிழ் மொழி வளர்ச்சிக்கு தேவையான கணினியின் திறன்**

வளர்ந்து வரும் தொழில் நுட்பம் எல்லாம் தமிழ்மொழிக்கும் செயல்படுத்த வேண்டும். அப்போது தான் தமிழின் பண்பாட்டு எல்லை விரிவடையும். தமிழ்மொழி அறிவை கணினிக்கு புரிய வைக்க கூடிய வகையில் கணித முறையில் அளித்தால் தான் இப்பணி வெற்றி அடைய முடியும். அதற்கான துறையாகக் கணினி மொழியில் மற்றும் மொழி தொழில் நுட்பத்துறை என்ற ஒருத்துறை இன்று வளர்ந்து வருகிறது. அத்துறை அறிவின் அடிப்படையில் தமிழ்மொழி ஆய்வு நடைப்பெற்றால் தான் மின்தமிழ் கணினித்தமிது வளர்ச்சியடையும்.

இலக்கண நூல்களும் இன்றைய மொழியில் ஆய்வுகளும் மனித மூளைக்காக உருவாக்கப்பட்டவை. அவற்றை அப்படியே கணினிக்குக் கொடுத்தால் கணினியால் புரிந்து கொள்ள முடியாது. கணினியில் அமைந்துள்ள மின்னுச் சில்லுகளுக்குப் புரியக் கூடிய கணினி நிரல்களாக அவை மாற்றப்பட வேண்டும். தமிழ் அகராதிகள் எல்லாம் கணினிக்குபுரிய கூடிய வகையில் மின்னகாராதிகளாக மாற்றப்பட வேண்டும். மனித மூளையின் திறன் வேறு கணினியின் திறன் வேறு. பின்புல அறிவைக் கொண்டு நமது மூளையால் ஒருக்கருத்தைச் சுருங்கச்சொன்னாலும் மறைமுகமாக சொன்னாலும் புரிந்துக்கொள்ள முடியும். ஆனால் கணினியால் அவ்வாறு முடியாது. எனவே தமிழ் இலக்கணமும் அகராதியும் கணினியின் புரிந்து கொள்ளும் முறைக்கு ஏற்ற வடிவில் கொடுக்கப்பட வேண்டும்.

**கணினி வழி தமிழ் மின்னுாலக வாய்ப்பு**

இணையத்தில் தமிழ் இலக்கணம் பழங்கால இலக்கியம் தொடங்கி தற்கால இலக்கியம் வரை கதை, கவிதை, கட்டுரை என்று தமிழ் இலக்கியங்கள் அனைத்தும் விரவிக் கிடக்கின்றன. தமிழ் எண்ணிம நூல்களில் பல ஆண்டுகளுக்கு முன் அச்சில் ஏற்பட்ட நூல்களும் கூட கிடைக்கின்றன. அதுமட்டுமல்லாது தற்காலத்தில் எழுத்தாளர்கள் மற்றும் கவிஞர்களால் அவர்தம் படைப்புகளை மின்னுாலாக வெளியிட்டு அவற்றைப் பிறருடன் பகிர்ந்து கொள்ள நல்லதொரு வாய்ப்பும் கிட்டுகிறது. இதில் இன்னொ வசதி என்னவெனில் தங்களது மின்னுால்களை ஆண்டிடாய்ட் (Androld) கிண்டில் (Kindle) போன்ற சாதனங்களுக்கு தரவிறக்க விரும்புவோரிடம் கட்டணம் வசூலிக்க விரும்பினாலும் வசூலித்துக் கொள்ளலாம். இது எழுத்தாளருக்கு வருவாய்கான வாய்ப்பாகவும் அமைகிறது. நமது மின்னுால்களை அசோமான்.காம் போன்ற வர்த்தக இணையத்திலும் விற்பனை செய்யலாம். நூல்களை அச்சில் ஏற்ற ஆகும் செலவு பதிப்பகத்தாரால் வெளியிட ஆகும் செலவு இவற்றைக் கருத்தில் கொண்டு பலரும் தற்போது தங்களது படைப்புகளை மின்னுாலாக வெளியிடுகின்றார். இப்படி வெளியிடும் நூல்கள் கண்டிப்பாக பல வாசகர்களை சென்றையுடம். இதனால் புத்தகம் வெளியிடுவோருக்கும் செலவில்லை. வாசிப்போரும் இலசமாகவே வாசித்து தங்களது மேலான கருத்துக்களை பகிர்ந்து கொள்ளலாம். வாசகர்களின் வரவேற்பினைப் பொறுத்து நூலினை அச்சில் ஏற்றலாம்.

**தமிழ் வளர்ச்சியில் இணையம்**

தமிழ் வளர்ச்சிக்கு கணினி இணைய தொழில் நுட்பம் பெரிதும் பயன்படுகிறது. இணையம் வந்த பிறகுதான் தமிழ் தகவல்கள் கடல்கடந்த நாடுகளுக்கு உடனுக்குடன் பரவின. இணையம் உலகத்தை ஒரு சிற்றுாராக்கியது. இணையம் உலகத்தை ஒரு சிற்றுாராக்கியது. இணையம் சார்ந்த பல கலைச்சொற்கள் தமிழிழ் உருவாக்கப்பட்டு வழக்கத்துக்கு வந்துள்ளன. குறிப்பாக மின்னஞ்சல் மின்வருடி மென்பொருள் வன்பொருள் படிமக்கோப்பு பதிவர் வலைப்பதிவு வலைப்பூ சமூக வலைத்தளம் இணையக்குழு விசைப்பலகை திரை மடிக்கணினி மேசைக்கணினி சுட்டி முதலான சொற்கள் பயன்பாடு நோக்கித் தமிழில் உருவாக்கம் பெற்றுள்ளன. இச்சொற்களின் வருகையால் தமிழ் மொழியில் கலைச்சொல்வளம் மிகுந்து வருகிறது.

தமிழ் இணையத்தில் தமிழ்ச்சார்ந்த செய்திகள் பல இடப்பட்டிருந்தாலும் இன்னும் உள்ளிடப்பட வேண்டிய செய்திகள் பல உள்ளன. தமிழ் இணையத்தை வளர்த்தெடுக்கப் பல மாநாடுகள் கருத்தரங்குகள் பயிலரங்குகள் வலைப்பதிவர் சந்திப்புகய் நடத்தப்பட்டன. இதன்படி உத்தமம் நிறுவனம் இதுவரை 14ங்கு உலக தமிழ் இணைய மாநாடு நடத்தியுள்ளது.

**சில சிக்கல்களும் தீர்வுகளும்**

ஒவ்வொரு தமிழ் இணைய தளங்களும் ஒவ்வொரு விதமான எழுத்துருங்களைக் கொண்டு வடிவமைக்கப்படுவதால் அத்தளங்கள் திரைக்கு வரும்போது தாலதாமதம் ஏற்படுகிறது. மேலும் எழுத்துக்கள் தாறுமாறாக (Junk) வருகின்றன. இதனால் பயனாளியின் பணமும் நேரமும் விரையமாகிறது. இதனைத் தவிர்க்க எளிதில் பதிவிறக்கம் செய்யக்கூடிய எழுத்துருக்கள் அல்லது தானாகவே பதிவிறக்கம் செய்யும் வகையில் (Auto Program) அமைப்பதால் திரையில் விரைவாகவும் சரியாகவும் வருவதற்கு அதிக வாய்ப்புகள் உள்ளன.

பல தமிழ் இணையத்தளங்களின் பகுதிகள் பெரும்பாலும் அவ்வப்போது புதுப்பிக்கப்படுவதில்லை. இதனால் பயனாளியை (User) சலிப்படைய செய்கிறது. குறைந்தது மாதத்திற்கு இருமுறையாவது தளங்களில் உள்ள தகவல்களை புதுப்பித்தால் தளங்களைப் பார்வையிடும் பார்வையாளர்களின் எண்ணிக்கை அதிகரிக்க வாய்ப்புள்ளது.

தகவல்களை முந்தித்தருவதை நோக்கமாகக் கொண்ட பெரும்பாலான இணையதளங்கள் அச்சுப்பிழையுடன் தகவல்களை வெளியிடுகின்றன. இதனை தவிர்க்க சாதாரண இதழ்களில் பிழைத்திருத்துவோரைக் கொண்டு பிழைத்திருத்தி வெளியிடுவது போன்று இணையத்திலும் தனியாகப் பிழைகளைத் திருத்தும் பணியாளர்கள் நியமித்து பிழையின்றி இணையத்தில் செலுத்தினால் (Launch) சிறப்பாக இருக்கும்.

**முடிவுரை**

“யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழிபோல் இனிதாவது எங்கும் காணோம்’’ என்பதனை இணைய வாயிலாக தமிழர்களின் இணைப்பை காணமுடிகிறது. “பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள் தமிழ்மொழியிற் பெயர்த்தல் வேண்டும்’’ என பிறமொழி பெயர்ப்புகள் கணினி வழிக் கண்டுணர முடிகிறது.

கல்லூரி மாணவர்கள் மத்தியில் தமிழ் வளர்க்கும் முயற்சியை அறிமுகம் செய்தால்ல கணினி தமிழ் வளரும், தமிழ் தொன்மை சிறப்பு தமிழ் பொறியாளர்களின் ஆர்வம் தமிழ் கணினிக்கான மென்பொருள்களின் பரவல் அத்துடன் உலகளாவிய தமிழர்களின் தமிழ்ப்பற்று ஆகியவை கணினி பயன்பாட்டின் வழி தமிழின் வளர்ச்சியை தடுக்க முடியாத முக்கிய காரணிகளாக அமையும் என்பதில் எள்ளளவும் ஐயமில்லை.